செ.வெ.எண்: 26/ஏப்ரல் நாள்: 28.04.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**

**திருமணம் மற்றும் இறப்பு சார்ந்த நிகழ்வுகளில்
கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு நடைமுறைகளை மீறுவோர் மீது
சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்களின் தகவல்**

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவுவதை தடுப்பதற்காக, 20.4.2021 அதிகாலை முதல் இரவு நேர ஊரடங்கு மற்றும் ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு அறிவிக்கப்பட்டு பல்வேறு கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக, திருமணம் / திருமணம் சார்ந்த நிகழ்வுகள் கலந்து கொள்வோர் எண்ணிக்கை 50 நபர்களுக்கு மிகாமல் மற்றும் இறப்பு சார்ந்த நிகழ்வுகளுக்கு கலந்து கொள்வோர் எண்ணிக்கை 25 நபர்களுக்கு மிகாமல் அரசு வெளியிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுடன் நடத்துவதற்கும் அதில் கலந்துகொள்வதற்கும் தடையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று வேகமாக பரவி வரும் சூழ்நிலையில் மேற்குறிப்பிட்டுள்ள அறிவிப்பினை பொதுமக்கள் தவறாமல் பின்பற்றிட கேட்டுக் கொள்ளப்படுகிறது. மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**